# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/26 - 2017 නොවැම්බර් මස 28 වැනි අඟහරුවාදා - 2017.11.28

*2047/26 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 21/1978* (X).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், பீவீ 64641 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சவுத் ஏஷியன் இன்ஸ்ரிரியுற் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதிய 1960/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இலும் நிரல் II இலும் அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "சிவில் பொறியியலில் பொறியியல் விஞ்ஞானமாணி" என்னும் பதிவை உடனடுத்துப்பின்னர் இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

சவுத் ஏஷியன் இன்ஸ்ரிரியுற் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் லிமிட்டெட் உயிர் முறைமையியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களை அனுமதிக்கும் போது, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் உயிரியல் விஞ்ஞான பாடநெறி அல்லது உயிர்முறைமையியல் தொழில்நுட்ப பாடநெறியில் மூன்று (03) 'S' சித்திகளை அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.


1A-PG 3791- 507 (2017/ 11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| உயிர் முறைமையியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பி. எஸ். சி. கௌரவ (உயிர் முறைமையியல்) |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 28.

12 - 397/1

---

ச. வ. பி. 21/1978 (X).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், பீவீ 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியேரிங் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2016, ஓகத்து 09 ஆந் திகதிய 1979/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இலும், நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "ஆங்கிலத்தில் கலை இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளைமூலம் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியேரிங் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, சில்லறைச் சந்தைப்படுத்தல் மற்றும் பண்டக்குறியிடுதலில் கௌரவ முகாமைத்துவ இளமாணி அத்துடன் விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி என்பன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும் போது, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று "சாதாரண" சித்திகளென்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அல்லது அதற்குச் சமமான தாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br><br>பட்டம் | நிரல் II<br><br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| சில்லறைச் சந்தைப்படுத்தல் மற்றும் பண்டக்குறியிடுதலில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிடி கௌரவ (சில்லறைச் சந்தைப்படுத்தல் மற்றும் பண்டக்குறியிடுதல்) |
| விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிடி கௌரவ (விநியோக சங்கிலி முகாமைத்துவம்) |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 28.

12 - 397/2